# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1952/11 - 2016 පෙබරවාරි මස 02 වැනි සඳුදා - 2016.02.01

*1952/11 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள் ) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்ந்து வாசிக்கப்படும் நகர சபை கட்டளைச் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

வடமேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் வடமேல் மாகாண நிதி, திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், பொருளியல் மேம்பாடு, மின் வலு, சுற்றாடல் விவகார, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை விவகார அமைச்சர் தர்மசிறி தசநாயக்க ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (223 ஆம் அத்தியாயம்) 223 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பின்வரும் கட்டளையை இத்தால் அறிவிக்கின்றேன்.

தர்மசிறி தசநாயக்க,<br>
முதலமைச்சர் மற்றும்<br>
நிதி, திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டமும் ஒழுங்கும்,<br>
உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், பொருளியல் மேம்பாடு, மின்<br>
வலு, சுற்றாடல் விவகார, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும்<br>
சுற்றுலாத்துறை விவகார அமைச்சர்,<br>
வடமேல் மாகாணம்.

குருநாகல்,<br>
*2016, சனவரி 29.*

### கட்டளை

1. இந்த கட்டளையானது, வடமேல் மாகாணத்தின் பிரதேச சபைகளில் 2016 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட ஆவணத்தை அமுல்படுத்துதல் தொடர்பான கட்டளை என எடுத்துக்காட்டப்படுகின்றது.

2. வடமேல் மாகாணத்தின் பிரதேச சபைகளுக்காக 2016 ஆம் ஆண்டிற்கு ஏற்புடைய வரவு செலவுத் திட்ட ஆவணம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறைவேற்றப்படாதவிடத்து, உரிய பிரதேச சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வரைவு வரவு செலவுத் திட்ட ஆவணம் இயைபான பிரதேச சபை அமைந்துள்ள வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் குறித்த பிரதேச சபையினால் 2016 ஆம் ஆண்டு பொருட்டு அமுல்படுத்துதல் சட்டபூர்வமானதாகும்.

3. இந்தக் கட்டளை 2016.01.01 ஆந் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

*2- 481*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*